மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 20



- கிறிஸ்தவ மனந்திரும்புதல்
- உனக்குத் தெரிந்ததை செயல்படுத்து
- தொன்றுதொட்டு இருந்து வரும் தேசம் தன் ஐம்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது
- தானியேல் - தேவனுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தல்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

| | |
|---|---|
| லினஸ் டேனியேல் | : தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| ராஜபட்சம் ஆனந்தா | : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர் |
| பவித்ரா | : நிர்வாகம், உபப்பதிப்பாளர் |

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கிறிஸ்தவ மனந்திரும்புதல்

"ஒன்றை மாற்றுவது என்றால் அதை ஏற்றபடிசெய்வது அல்லது திருத்துவது. ஒரு காரை மேற்கூரையை அகற்றலாம் அல்லது அதைமூடி விடலாம். மின்சாதனம் ஒன்றை வேறு வோல்ட்டேஜில் வேலை செய்யும் விதமாய் மாற்றலாம்.

ஆனால் மக்கள் மனந்திரும்புவது அல்லது மனமாற்றம் அடைவது என்றால் என்ன? இரட்சிக்கப்படவேண்டுமென நாம் விரும்பினால், பேதுரு கூறியபடி நாம் மனந்திரும்ப வேண்டும் தான்.

*"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப்போஸ்தலர் 2:38)"*

"உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்" *(அப்போஸ்தலர் 3:20)*

### முக்கியமான தேவை

எளிதான வாழ்க்கை வாழும் இக்காலத்தில் கிறிஸ்தவம் மிகவும் பிரத்தியேகமான காரியங்களை மக்கள் முன் வைக்கிறது. மத அதிகாரிகள் சவால்விட்டு, எருசலேமில் பிரசங்கிக்கக்கூடாது எனக் கூறப்பட்ட பின் அப்போஸ்தலன் அதற்கு கீழ்ப்படியமுடியாது என்றார். ஏனென்றால், *"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொருநாமம் கட்டளையிடப் படவும் இல்லை.'' (அப்போஸ்தலர் 4:12)*

பேதுரு புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. இயேசு அடிக்கடி சொல்லிவந்ததைத்தான் விவரித்தார். அதாவது அவர் மட்டுமே மக்களை இரட்சிப்புக்கு நேராக நடத்த முடியும். நாம் சிந்திக்கும் முறையையும், செயல்படும் விதத்தையும் மாற்றினால் தான் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாகி, தேவனுடைய ராஜ்யத்தை ஆள அவர் வரும்போது நடக்கும் எல்லாவற்றிலும் அவர்கள் பங்கு பெற்றுக்கொள்ளலாம். இங்கே மூன்று சம்பவங்கள் தரப்பட்டுள்ளன.

இயேசு மக்களிடம்

*"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்." (மாற்கு 1:15)*

### இயேசு நிக்கொதேமுவிடம்

*''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்...*

*ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்." (யோவான் 3:3-5)*

## இயேசு தம் சீஷர்களிடம்

*"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்." (மத்தேயு 18:3,4)*

இதே செய்தியைத் தான் பேதுரு எருசலேமிலிருந்த கூட்டத்தாருக்குப் பிரசங்கிக்கக் கேட்டோம் - அவர்கள் மனந்திரும்ப வேண்டும், ஞானஸ் நானம் பெற வேண்டும் இரட்சிக்கப்படவேண்டும். இயேசு தம் சீஷர்களுக்குப் போதித்தார். இப்பொழுது பேதுரு அந்தப் போதனையைத் தொடருகிறார். பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் நாம் இரட்சிக்கப்படுவதற்கான ஒரேவழி அதுவே.

தேவன் நாம் அவரோடு உறவு கொள்ளக்கூடிய வாய்ப்பையும், என்றென்றும் நீடிக்கும் ஒரு வாழ்வையும் நமக்கு அளிக்கிறார். ஆனால் நாம் நம்முடைய பங்கைச் செய்யவேண்டும். நடக்கப் பழகும் சின்னக் குழந்தைகளைப் போல, நாம் அவரை நோக்கிச் சில தப்படிகள் எடுத்து வைத்தால், நமக்கு உதவிசெய்யவும், நம்மை உற்சாகப்படுத்தவும் அங்கே நம்மோடு இருப்பார்.



## வீட்டிற்குத் திரும்பி வருதல்

தன் வாழ்க்கையைக் குழறுபடியாக்கிவிட்ட ஒரு மனிதனைப் பற்றிய உவமையை இயேசு ஒரு சமயம் கூறினார். குடும்பச் சொத்தில் தன்னுடைய பங்கை உடனடியாகக்



கொடுக்கும்படியாக அவன் தந்தையிடம் கேட்டான். அவன் வீட்டை விட்டுப்போய், பணத்தைப் புத்தியீனமாய்ச் செலவழித்தான். வெகு சீக்கிரத்தில், தூரத்தில் இருந்த அவன், தான் எத்தனை பெரிய முட்டாள் என்றும், எல்லாமே எவ்வளவு பெரிய தவறாய்ப் போய்விட்டது என்பதை உணர்ந்தான். அவனுக்கு நண்பர்களில்லை, பசியாயும், நம்பிக்கை இழந்தவனாயும் இருந்தான். தன் உயிரைக் காப்பாற்றப் பன்றியின் உணவு கிடைக்காதா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

ஓர் எண்ணம் அவனுக்குத் தோன்றியது. மனந்திரும்பியவனாய் தன் தகப்பனிடம் திரும்பிப் போய், எவ்வளவு தகுதியற்றவன் தான் எனச் சொல்ல வேண்டும் என எண்ணினான். ஆகவே அவன் வீட்டிற்குத்திரும்பிப் போனான். அவன் எவ்வளவு கவலையோடு அந்தப் பயணத்தைத் தொடர்ந்திருப்பான் எனக் கற்பனை செய்து பாருங்கள். தகப்பனிடம் முதலில் என்ன பேசவேண்டு மென்பதை ஏற்கனவே அவன் ஆயத்தப்படுத்திக் கொண்டதாக இயேசு கூறினார்.

தகப்பனாரைப் பற்றி என்ன? தன் மகனை இனி ஒரு போதும் பார்க்க விரும்பவில்லை என அவனைக் கைகழுவி இருப்பாரா? நல்நடக்கைக்குப் பதிலாய்த் தன்தந்தையிடம் மிக மோசமாகஅல்லவா நடந்து கொண்டான். ஆனால் அவருடைய மனப்பான்மை ஆச்சரியமானது. அதை இயேசுவே சொல்கிறார்.

*"அவன்தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி, தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சையையும் போடுங்கள். கொழுத்தக்கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள்; நாம் புசித்து, சந்தோஷ மாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான்." (லூக்கா 15:20-24)*

உவமைகள் பரலோக உண்மைகளை விளக்கிக் காட்டும் கதைகள். இந்த உவமையும் அதேதான். அனைத்து ஆண்களும் பெண்களும் தேவனிடம் திரும்பி வரும்படித் தீர்மானிக்கும் வகைத் தங்கள் வாய்ப்புகளை வீணாக்கிவிடுகிறார்கள். அந்த மாற்றத்திற்காகப் பரலோகத்தில் இருக்கும் பிதா எப்போதும் காத்துக்கொண்டேயிருக்கிறார். அந்த மாற்றம் நடக்கும் என்று எப்போதும் நம்பிக்

கொண்டிருக்கிறார். அவர் நம்மை ஏற்றுக் கொள்ளவும், நம்மோடு சந்தோஷமாயிருக்கவும் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் நாம் தீர்மானம் எடுத்து, நாம் தவறிழைத்திருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

**படிப் படியாக**

பிதாவின் தயவிற்கு நேராக நம்மை நடத்தும் வழியைப் பின்பற்றுவோம் - அதாவது இயேசு பயன்படுத்திய வார்த்தைகளை ஆராய்ந்து செல்வோம்.

**மனந்திரும்பி விசுவாசியுங்கள்**

*இயேசு, "மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15)* என மக்களிடம் கூறிய போது, அவர் அவர்களை 2 காரியங்களைச் செய்யச் சொன்னர் அதே சமயம், அதை அவர்கள் எப்படி செய்வது என்பதையும் விளக்கினார். மனந்திரும்புதல் என்றால் பாவத்தை விட்டுத் திரும்புவது. ஆனால் நாம் இருக்கிற நிலையில் அது சுலபமல்ல.



இனிமையான பாதை ஒன்றில் நீ நடந்துகொண்டிருக்கும்போது, நீ நடக்கக்கூடிய மிக நல்ல பாதை ஒன்றைக் கண்டாயானால் உன் திசையை மாற்றிக் கொண்டு நடக்கத் தீர்மானிப்பாய். நாம் சுவிசேஷத்தை விசுவாசிக்கும்போது நடப்பது அதுதான். நம் இரட்சிப்பைப்பெற தேவன் ஏற்கனவே செய்துவிட்டதும், இப்போது செய்கிறதும் இனி செய்யப் போவதுமானதைப் பற்றிய "நற்செய்தி"

நமக்காக மிகச் சிறந்ததை வாஞ்சிக்குமளவிற்கு தேவன் நம்மை மிக அதிகமாய் நேசிக்கிறார் என்பதை அறிவதை விட மேலானது வேறெதுவுமில்லை. அதைச் சாதிக்க அவர் தமது ஒரே பேறான குமாரனை, நமக்காக மரித்து இவ்விதமாய் நம்மைப் பாவத்தினின்றும்



மரணத்தினின்றும் இரட்சிக்கும்படி அனுப்பினார். சீக்கிரத்தில் ஒரு உலகளாவிய ராஜ்யத்தை ஸ்தாபிக்க தேவன் தம் குமாரனை பூமிக்கு அனுப்புவார். அவர் ஆளுகை உலகை மாற்றியமைத்து, சத்தியமும், சமாதானமும், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இசைந்த நிலையுமுள்ள ஒரு அழகான இடமாகப் பூமியை மாற்றும்.

அந்த விதமாகத் தான் நாம் நடக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறோம். நாம் புரிந்து விசுவாசிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் படுகிற சுவிசேஷ சத்தியமும் அதுதான். நாமே வேதத்தை வாசித்து அதை விளங்கிக்கொள்வது, நம் வாழ்வைச் செழிப்பாக்கி, அவ்வுலகத்திலும், இனி வரும் உலகைக்குறித்தும் நமக்கு நம்பிக்கையளிக்கும்.

**மறுபடியும் பிறந்திடு**



நிக்கொதேமு பக்திமார்க்கப் படிப்பில் நன்கு தேர்ந்த ஒரு மனிதனாக இஸ்ரவேலிலே வாழ்ந்து வந்தபொழுது, ஓர் இரவில் அவன் இயேசுவைப் பார்க்க வந்தான். அவன் ஒரு கல்விமானாயிருந்தும் நாசரேத்திலிருந்து வந்த ஒரு சாதாரணத் தச்சனைப் பார்க்க வந்தான். யூத சமுதாயத்தின் கண்களில் அது சரியானதாகப் பட்டிருக்காது. ஆகவே *"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண முடியாது." என இயேசு அவனிடம் கூறியபோது, அவன் திடுக்கிட்டுப் போயிருப்பான். (யோவான் 3:3)*

இயேசு அதிகாரத்தோடு சொன்னதைக் கேட்டு அவன் ஆச்சரியப்பட்டிருப்பான். ஆகவே, அதன் விளக்கத்தைக் கேட்டான். இயேசுவும் மறுபடிபிறப்பதில் அடங்கியுள்ளது பற்றி அவனிடம் கூறினார். அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டும். (யோவான் 3:5)

இயேசு கூட யோவான் ஸ்நானனால் யோர்தான் நதியில் ஞானஸ்நானம்

பெற்றுத் தம் ஊழியத்தை ஆரம்பித்தார். ஞானஸ்நானம் எடுக்கையில் இதைத்தான் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்று கூறினார். (மத்தேயு 3:15) ஞானஸ்நானம் என்பது, ஒரு வகையில் கடந்த காலத்தைப் புதைப்பது, தேவனுடைய பார்வையில் அடையாளமாக (நம்மைக் கழுவிக் கொள்வது எனப் புதிய ஏற்பாடு விளக்குகிறது. அந்தக் காரணத்திற்காகத்தான் முற்றிலும் நீரில் மூழ்குவது. சும்மா தலையில் தண்ணீரைத் தெளிப்பதில்லை. அதுவும் மனந்திரும்பிய விசுவாசிகளால் செய்யப்பட வேண்டியதே தவிர குழந்தைகளுக்குச் செய்யப்படும் காரியமல்ல. நடப்பது எதையும் அவர்கள் அறியார்களே. அதனால் தான் ஆவிக்குரிய மறுபிறப்பு வேண்டு மென்றார். - ஆவியினாலே பிறத்தல் வேண்டும்.)

**வளருதல்**

ஆவிக்குரிய வளர்ச்சியின் (முன்னேற்றம்) பாதையில் முதல்படி ஞானஸ்தானம் பெறத் தெரிந்து கொள்வது. ஒரு காலத்தில் நம்மையே பிரியப்படுத்திக் கொண்டிருந்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போல ஆகும்படி வளரும் மக்களாக, அவரைப் பிரியப்படுத்த முயலும் மக்களாக அது நம்மை மாற்றுகிறது. அதற்கு நேரம் எடுத்துக் கொள்கிறது. ஆகவே இயேசு ஒரு சமயம் ஒரு பிள்ளையைத் தன்னிடமாய் அழைத்து, தம் சீஷர்களிடம், *“நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்.” என்றார் (மத்தேயு 18:3)*

மனந்திரும்புதல், விசுவாசம், ஞானஸ்நானம் - இவை எல்லாமே ஆவிக்குரிய வளர்ச்சிப் பாதையில் உள்ள படிகள். ஆகவே நாம் நம் சுபாவ நடத்தையை மாற்றி ஆவிக்குரிய குணநலன்களை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்றால், நம்மைத் தாழ்த்தி, ஒரு குழந்தையைப் போன்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

எருசலேமின் ஜனங்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்த அப்போஸ்தலனாகிய பேதுரு அவர்களை மனந்திரும்பச் சொன்னார். குழந்தைகள் பால் அருந்தி வளர்ச்சி பெறுவது போல நாமும் தேவனுடைய வார்த்தையை (வேதாகமம்) ஆவலுடன் வாசித்து வேகமாக வளரவேண்டும் என்றும் பேதுரு கூறுகிறார். (பேதுரு 2:1-3)

தமஸ்குவுக்குப் போகும் வழியில் இரட்சிக்கப்பட்ட பவுல் அப்போஸ்தலன் நாம் இயேசுவைப் போலிருக்கும்படி வளரவேண்டும் என்றார். *“நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமனப்பட்டவர்களாக” வேண்டும். (எபேசியர் 4:11)*



# உனக்குத் தெரிந்ததை செயல்படுத்து

ஒரு கல்லூரி பேராசிரியரை குறித்த ஒருகதை உண்டு அவர் ஒரு புரட்சிகரமான புதிய சூத்திரத்தை உருவாக்கினார் அவர் ஒவ்வொரு கல்லூரியாக பயணம் செய்து அவருடைய கண்டுபிடிப்பைகுறித்து விருந்திற்க்குபின்னர் பேசும் பேச்சாளராக அழைக்கப்பட்டார். அவருக்கு ஒருமோட்டார் வண்டியும் (கார்) அதை ஓட்ட ஒரு ஓட்டுனரும் கொடுக்கப்பட்டது. இந்த ஓட்டுனர் அவரோடுகூட சென்று ஒவவொருநாள் இரவும் பலமாதங்களாக அவர் கொடுக்கும் அதே சொற்பொழிவை கேட்டுக் கொண்டு இருந்தார். அப்படியாக அவர்கள் ஒருநாள் மாலையில் மேற்கில் இருந்த ஒருசிறிய நகரத்திற்கு சென்றுக்கொண்டு இருந்தபோது பேராசிரியா சுகவீனமடைந்தார். அவர் ஓட்டுனரிடம், அந்த ஊரில் உள்ளவர்கள் அவ்விருவரையும் எப்போதுமே பார்த்திராததினால், தன்னுடைய இடத்தில், தன்னைப்போல் இருந்து தனக்கு பதிலாக பேசும்படி யோசனை கூறினார். அந்த ஓட்டுனரும் அந்த யோசனைக்கு இணங்கினார், ஏனெனில் அவர் அந்த சொற்பொழிவை அனேக முறைகேட்டு இருந்ததினால் அது அவருக்கு மனப்பாடமாகி இருந்தது. அந்த சொற்பொழிவு முடியும் வரை எல்லாம் நல்லவிதமாக நடந்தது. பின்னர் அவைத்தலைவர் பார்வையாளர்கள் கேள்வி கேட்கலாம் என்றும் பேராசிரியர் அதற்கு விடைதருவார் எனவும் அறிவித்தார். முதல் கேள்வி மிக நீளமானதாகவும் சிக்கலாகவும் இருந்ததால் ஓட்டுனர் எழுந்திருந்து புன்முறுவலோடு அந்த கேள்வியை கேட்டதற்காக கேட்டவருக்கு நன்றிகூறி பின்னர், அந்த கேள்வி மிகவும் எளியதாக இருப்பதால் தனக்கு பதிலாக தன் ஓட்டுனரை பதில்தர அனுமதிப்பதாக கூறினார்.



நாம் அந்த ஓட்டுனரை போல இருக்கின்றோமா? ஒன்றிராண்டு குறிப்பிட்ட நம்பிக்கைகளை மாத்திரம் அறிந்திருக்கிறோமா? ஆனால் நமக்குள் இருக்கும் நம்பிக்கையை குறித்த கேள்விகளுக்கான விடையை தரவோ அல்லது

விளக்கவோ வேண்டும் போது நம்மால் பதில்தர இயலாதவர்களாக இருக்கின்றோமா ?

உண்மைகளை நாம் மனப்பாடமாக தெரிந்து வைத்திருக்கின்றோமா ? ஆனால் அதை நம் தினசரி வாழ்க்கையில் நடைமுறையில் செயல்படுத்த கூடாமல் இருக்கின்றோமா ? துரதிர்ஷ்டவசமாக இவ்வுலகில் உள்ள அநேக மனிதர் பெரிய ''உண்மைகளை'' அறிந்திருந்தும் அந்த ''உண்மைகளை'' நன்மையான பயன்தரும்படி எந்த வழியிலும் உபயோக படுத்த கூடாதவர்களாய் இருக்கின்றனர்.

கல்லூரி பேராசிரியருக்கு அந்த சூத்திரம் மட்டும் தெரிந்திருக்கவில்லை, ஆனால் அந்த அறிவை உபயோகமான நோக்கங்களுக்காக செயல் படுத்தும் படியாகவும் தெரிந்திருந்தது அந்த ஓட்டுனருக்கு சொற்பொழிவு தெரிந்திருந்தது ஆனால் தனக்கு தெரிந்ததை எப்படி செயல் படுத்த வேண்டும் என்று தெரியவில்லை.

நாம் உண்மையின் ஆரம்ப நியமங்களை அறிந்திருக்கிறோமா ? ஆனால் இன்னும் நம் தினசரி வாழ்வில் நாம் எப்படி வாழவேண்டும் என்று தெரிந்திருக்கும் காரியங்களை செயல்படுத்தகூடாமல் இருக்கின்றோமா ? நாம் உண்மையை அறிந்தவர்களாக இருக்கவேண்டியது மிக முக்கியமானது.

உண்மையை அறிந்திருப்பது எவ்வளவு அவசியமோ அதின்படி வாழ்வதும் அதே அளவிற்கு அவசியம் நாம் எவ்வளவு இரக்கத்தை காண்பிக்கின்றோமோ அதே அளவு இரக்கமே நமக்கும் கிடைக்கும் என்பதை நாம் அறிந்திருக்கும் போது எப்படி நாம் மற்றவர்களை இப்பொழுது நடத்துகிறவிதமாக நடத்தக்கூடும் ? மற்றவர்களிடம் அதிகமாக எதிர்பார்த்தும் நம்மிடம் கடுமை இல்லாதவர்களாகவும் எப்படி இருக்க கூடும்.

அந்த வாகன ஓட்டுனருக்கு பேராசிரியருடைய சொற்பொழிவு ஒருவேளை தெரிந்திருக்ககூடும், மேலும் மிக சரியாக மனப்பாடமாக சொல்லக்கூடும். நமக்கும் உண்மை துவக்கமுதல் முடிவுவரை நன்றாக தெரிந்திருக்கலாம் ஆனால் அவ்வுண்மையை செயல் படுத்தாவிட்டால் அதினால் என்ன பயன் உண்டு ?

நமக்கு தெரிந்திருந்தும் செய்யாமல் இருப்பது, தெரியாமல் இருப்பதைவிட மிக மோசமானதாகும் பேதுருவும் "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாய் இருக்கும்" என்கிறார்.

நமக்கு தெரிந்துள்ள உண்மையை நாம் சரியாக செயல்படுத்துகிறோமா ? நமக்கு தெரிந்ததின்படியல்ல, நாம் செய்வதின்படி, நாம் சொல்வதின் படியல்ல நம் செயலின்படி உண்மை நம் வாழ்க்கையை மாற்றி உள்ளதா ? அந்தவாகன



ஓட்டிக்கு நன்றாக அதை சொல்லதான் தெரியுமே தவிர சிறதளவேனும் கேள்விக்கு பதில்கூறவோ தான் கேள்விபட்ட அந்த அறிவை நடைமுறைபடுத்தவோ தெரியவில்லை.

உண்மை நம் வாழ்வில் ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். அதை அறிந்திருக்கின்ற ஒன்றாகவோ, நம்புகின்ற ஒன்றாகவோ மாத்திரம் அல்ல இவைகளும் முக்கிய மெனினும், அது செயல்படுத்த கூடிய ஒன்று அது வாழ்வதற்காக ஒருவழிமுறை ஆகும்.

நாம் ஒவ்வொருவரும் நமக்கே இந்த கேள்விகளை கேட்டுக் கொள்ளவேண்டும்.

எனக்கு தெரிந்திருப்பதினால் என் வாழ்க்கை எவ்விதத்தில் வித்தியாசமாக இருக்கின்றது ? தேவனை நான் நேசிப்பதினால் என் வாழ்க்கை எந்த அளவு அதிகமாக பக்தியுள்ளதாக இருக்கின்றது ? இயேசுவின் மீது எனக்குள்ள அன்பினால் மற்றவர்களை வித்தியாசமாக நடத்துகின்றேனா ? இயேசு கூறினார் "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.'' ''சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்த சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்ககொடுக்கிறவனும் தன்பலனை அடையாமற் போகான்."

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நம்மில் சிலர் மற்றவர்களை நடத்தும் விதம் அவர்களை அழவைக்கும். நமக்கு உண்மை தெரியவில்லை என்பதினால் அல்ல இயேசு தம் சீஷர்கள் காண்பிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற அன்பை காண்பிக்காததினால் இதையெல்லாம் நாம் அவர் நாமத்தினாலே செய்கின்றோம்.

யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி வகைசெய்துக் கொண்ட பின்னரும் இயேசு குனிந்து தன் கைகளால் யூதாஸ்காரியோத்தின் கால்களை கழுவினார்.

தேவன் ஏசாயாவின் மூலம் கூறுகின்றார் "தேவனுக்கு மகிமை உண்டாவதாக" என்று மிகவும் பக்தியாக நாம் கூறிக்கொண்டே எப்படி நாம் நம் சகோதரர்களை புறக்கணிக்ககூடும் என்று தேவன் மேலும் நமக்கு கூறுகின்றார் ''அவர் உங்களுடைய மகிழ்சியாக வெளிப்படுவார் (புறக்கணிக்கப்பட்டவர்கள்) அவர்கள் இலச்சையை அடைவார்கள் (யார் தங்கள் சகோதரரை புறக்கணிக்கின்றார்களோ)"

அந்த வாகன ஓட்டியைபோல, சரியானவார்த்தைகளை அறிந்திருந்தும் அதை செயல்படுத்த கூடாமல் - நாம் இருக்க கூடாது. ஒரு ஞானப்பாட்டு இவ்வித வரியுடன் முடிவடைகின்றது. ''இந்த நாளிலும் வரும் எல்லாநாளிலும் நாங்கள் ஜெபிப்பதின்படி வாழ எங்களுக்கு உதவி செய்யும்." நம் தேவன் நமக்கு உதவ வேண்டுவது அவசியம் அப்பொழுதுதான் நாம் ஜெபிப்பது போலவும் நமக்கு தெரிந்துள்ள வைகளின் படியும் நாம் அதிகமாக வாழமுடியும்.

# தொன்றுதொட்டு இருந்து வரும் தேசம் தன் ஐம்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது

## அடுத்து இஸ்ரேலுக்கு என்ன நிகழும்?

ஐம்பது ஆண்டுகளுக்குச் சற்று முந்தைய நாட்களில் இஸ்ரேல் என்ற பெயர் வரலாற்றுப் புத்தங்களில் மட்டுமே இருந்து வந்தது. முதலாம் நூற்றாண்டில் இந்த தேசம் அழிக்கப்பட்டது. அச்சமயத்தில் யூதர்கள் காற்றுத் திசை நான்கிலுமாக சிதறிப் போனார்கள். பத்தொன்பது நூற்றாண்டுகளாக, தங்களுக்கென சொந்த இடம் இல்லாத மக்களாக, ஐரோப்பா முழுவதும் அலைந்து திரிந்தார்கள். இருப்பினும், மே மாதம் 14ம் தேதி 1948ல் இதெல்லாமே மாறிப்போயிற்று. முழு உலகின் காதுகள் கேட்க, இஸ்ரேல் நாடு அமைக்கப்பட்ட விவரத்தை, ஆழ்ந்த உணர்ச்சிப் பெருக்கோடு டேவிட் பென் குரியன் முறையாக அறிவித்தார். ஒரு தேசம் மறுபடியும் பிறந்தது.



இன்று ஏறத்தாழ 60 லட்சம் மக்கள் இஸ்ரேல் நாட்டில் வாழ்கின்றனர். பொருளாதாரத்தில் மிக உன்னத நிலையை அடைந்த உலகின் பன்னிரண்டு நாடுகளில் ஒன்றாக இஸ்ரேல் திகழ்கிறது. 1990-94ல் இஸ்ரேலின் தொழில் வளர்ச்சி விகிதம் 32.5 சதவீதம் மேற்கத்திய உலகில் இரண்டாவதாகவும், கொரியா 34.5 சதவீதம் முதலிடத்திலுமாக உள்ளது. வைரம் மற்றும் ரத்தினக்கற்கள் தொழிலில் உலகின் 80 சதவீத உற்பத்தி இஸ்ரேலினுடையது. யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்து உலகிற்கு விநியோகம் (விற்பனை) செய்வதில் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

### ஐரோப்பாவில் விதைத்த விதை

அழிவேயில்லாத இனம் எனக் கருதப்படும் மக்களின் நாட்டை (தேசத்தைத்) தோற்றுவித்த தந்தை என தியோடர் ஹெர்சல் எனக் கருதுகிறார்கள். அவர் 1860ம் ஆண்டில் பூடாபெஸ்ட் நகரில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே “யூதர்களின் பிரச்சினை” அவர் மனதைப் பெரிதும் பாதித்தது. ஹெர்சல் பிறந்தது யூதர்களை வெறுக்கும் ஐரோப்பாவில். அங்கே யூதர்களுக்கெதிரான மக்கள் கும்பலின் வன்முறை சர்வ சாதாரணமாக நடந்துவந்தது. இப்‘பிரச்சினை’க்குத் தீர்வு, பிரச்சினையை இல்லாமல் செய்து விடுவதுதானே தவிர பிரச்சினையிலிருந்து விடுதலை அல்ல. 1894ம் ஆண்டு ஹெர்சலின் வாழ்க்கையின் நோக்கத்தையே



மாற்றிவிட்டது எனலாம். யூதகுலத்தில் தோன்றிய ஒரு ஃபிரெஞ்சு அலுவனர் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, ஜெர்மன் மக்களுக்கு ராணுவ ரகசியங்களைக் கூறிவிட்டாரெனத் தீர்ப்பாயிற்று. இவ்வழக்கின் விளைவாக யூதர்களுக்கெதிரான உணர்வு மக்களிடேயே அதிகமாக, ஹெர்சலின் இன உணர்வும் தலைதூக்கியது. அரசியல் ரீதியாகவே யூதப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற முடிவுக்கு வந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஹெர்சல் ‘யூத நாடு’ என்றொரு புத்தகம் எழுதி, அதில் தங்கள் பிரச்சினைக்கான தீர்வையும் கூறியிருந்தார். முழுமையான செயல்திட்டத்தை மிகத் தெளிவாகக் கூறி, யூதருக்கென ஒரு தாய்நாடு (சொந்த நாடு) பாலஸ்தீனத்தில் ஏற்படுத்தலாம் என முதன்முதலாக எழுதியிருந்தார். 1897ல் சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் முதல் சீயோன் காங்கிரஸ் என்ற மாநாட்டை ஹெர்சல் கூட்டி, அந்த மாநாட்டிற்கு அவரே தலைமை தாங்கினார். அக்கூட்டம் முடிந்தபின்னர் ஹெர்சல் தன் நாள் குறிப்பேட்டில், *“பாசல் காங்கிரஸைப் பற்றி ஒரு வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால்,”* பாஸலில் நான் யூதநாட்டைத் தோற்றுவித்தேன் என எழுதினார். *“இதை நான் வெளியே சொன்னால் முழு உலகமுமே சிரிக்கத் தான் செய்யும், ஆனால் ஐந்து ஆண்டுகளில், எப்படியும், உறுதியாக ஐம்பது ஆண்டுகளில், நான் சொல்வதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.”*

நினைவினின்று நீங்கா இம் மாநாடு உலகெங்கும் உள்ள யூதர்களின் உள்ளார்ந்த வாஞ்சைகள் கொழுந்து விட்டெரியக் காரணமாயிற்று. பதினேழு ஆண்டுகளுக்கு, பின்னர் முதல் உலக யுத்தம் வெடித்தது. அதன் விளைவு ஹெர்சலின் கனவு பலிக்க ஒரு படி முன்னேற வழி வகுத்தது. 1917ல் ஜெனரல் ஆலன்பி எருசலேமைக் கைப்பற்றி, பாலஸ்தீனத்தை துருக்கியரின் பிடியிலிருந்து மீட்டார். அதேசமயம் “யூத மக்களுக்கு ஒரு சொந்த நாடு அமைத்துக் கொடுக்கும் கடமை” தங்களுக்கிருப்பதை பிரிட்டிஷ் அரசு பால்ஃபர் அறிக்கை மூலம் தெரிவித்தனர். முதல்சீயோன் காங்கிரஸ் மாநாட்டிற்கு ஐம்பது ஆண்டுகள் கழித்து, 1947ல் ஐக்கிய நாடுகளின் சபை பாலஸ்தீனத்தை யூதநாடு, அரபு நாடு என இரண்டாகப் பிரிக்க ஒப்புக்கொண்டது. ஓராண்டுக்குப் பின் மே 14ம் தேதி 1948ல் டேவிட் பென்குரியன் பாலஸ்தீனத்தில் யூதநாடு அமைக்கப்பட்டதை அறிவித்தார். ஒரு பத்திரிகையாளன் இவ்வாறு எழுதினார். *“1878 ஆண்டுகளாக நாடுகடத்தப்பட்டு அல்லலுற்றபின், யூத தேசம் பிறந்ததை அறிவிக்க 32நிமிடங்களே பிடித்தது!”* இதற்கு மேல் நடந்தது வரலாறு.

தியோடர் ஹெர்சல் கனவு காண்பவர் மட்டுமல்ல, செயல்திறம் மிக்கவரும் கூட. அவர் எழுதிய ஒரு புதினத்தின் கடைசி வரி புகழ்வாய்ந்த சீயோன்வாதிகளின் வாசகமாயிற்று. *“நீ ஒன்றைச் செய்யத் தீர்மானித்து மனசு வைத்து விட்டால், அது இனி கனவல்ல.”* இந்த அற்புதமான சம்பவத்திற்கான காரணம் யாது? என்பது நம் கேள்வியாக இருக்கவேண்டும். வேறு எந்த ஒரு

மக்களும் சொந்த நாட்டை விட்டு நீக்கப்பட்டு, உலகமெங்கும் சிதறி, உபத்திரவத்திற்குள்ளாகி, சிறுமமைப் படுத்தப்பட்டு, கிட்டத்தட்ட கூண்டோடு அழிக்கப்படும் நிலைக்குள்ளாகி, தப்பிப் பிழைத்து, தங்கள் பூர்வீக நாட்டிலேயே மறுபடியும் குடியேறியதாக வரலாற்றுப் புத்தகங்களில் காணமுடியாது. மீண்டும் தோன்றியதன்பின் இந்தச் சின்ன இஸ்ரேல் நாடு, தன் அண்டைநாட்டு அரேபியர்களோடு ஏற்பட்ட நான்கு பெரிய யுத்தங்களுக்குப் பின்னரும் முன்னேறி வருகிறது.

"யூதர்களின் அழியாமைக்கான இரகசியம் என்ன?" என மார்க்ட்வெய்ன் ஒரு முறை வினவினார். ஆம், என்னதான் அந்த இரகசியம்? ஹெர்சல் போன்றோருக்குக் கனவு மட்டும் இருக்கவில்லை. அதைத் தொடர்ந்து பிடித்து நிஜமாக்கும் வலிமையான மனம் (பிடிவாதம்) இருந்ததில்லையா? இன்றைய இஸ்ரேல் ஒரு அற்புதம் என்பதில் சந்தேகமே இல்லை ஆனால் ஏன்? யூதரின் இரகசியம் யாது?




### எல்பிஸ் இஸ்ரேல் (இஸ்ரேலின் நம்பிக்கை)

டாக்டர் ஜான் தாமஸ் என்பவர் தியோடர் ஹெர்சல் பிறப்பதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எல்பிஸ் இஸ்ரேல் (இஸ்ரேலின் நம்பிக்கை) என்றொரு புத்தகம் எழுதினார். வெகு சிலரே இதை அறிவர். ஹெர்சலின் எழுத்துக்கள் போல, இவர் எழுதியவை உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை யெனினும், அவர் எழுதியதை இங்கு காண்பது நலமே.





"ஒரு பகுதி யூத மக்கள், முதலில் பழைய நிலைக்கு வருவது இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன் நிகழும். இதை ஆதாரமாகக் கொண்டு பிற்கால நடவடிக்கைகள் இருக்கும். மற்ற கோத்திரங்கள் அவர் ராஜ்யத்தில் தோன்றியதன் பின் மீண்டுவருவார்கள். அவரின் வருகைக்கு முன்னால் பாலஸ்தீனத்தில் குடியேறுவது அரசியல் ரீதியாகத்தான். இயேசுவே மேசியா என்பதையும் அவரில் இருக்கும் சத்தியத்தையும் நம்பாதவர்களாக யூதர்கள் தங்கள் நாட்டில் குடியேறுவார்கள். விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும் இந்நாட்டுக்கு வந்து, பின்னர் இந்தியாவுடன் வாணிபம் செய்து வெள்ளியும் பொன்னும் நிறைந்த செல்வந்தார்களாவர். பிரிட்டிஷ் ஆட்சியின் பாதுகாப்பின் கீழ் அவர்களின் தொழில் வளம் பெருகும்.



The Holocaust Museum in Washington DC, where the following words are inscribed from the prophet Isaiah, "You Are My Witnesses."

இன்று பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கும் மக்கள், பரிசுத்த பூமியின் இறையாண்மையைக் காத்தவர்களாய், அங்கே யூதர்கள் குடியேறுவதை ஆதரிப்பார்களா என எனக்குத் தெரியாது. ஆனால் நடக்கப் போகும் சம்பவங்களால், அவர்களால் (பிரிட்டிஷ்) செய்வதற்கியலாத காரியங்களையும் செய்ய வற்புறுத்தப்படுவார்கள். தேவனுடைய விரல், பிரிட்டிஷார் செல்ல வேண்டிய வழியை வகுத்துவிட்டது. அதை மீறமுடியாது. பிரிட்டிஷ் ஆலோசகர்கள் ஆண்டவர் வகுத்த வழியை உச்சக்கட்டம் வரும்போது ஆர்வமுடன் பின்பற்றுவர்."

### அவர் கருத்துக்களைச் சுருங்கக் கூறின்:

1. பின் வரும் காலத்தில் யூதர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்ப வருவார்கள்.
2. இயேசுகிறிஸ்து மீண்டும் வருவதற்கு முன் யூதர்கள் தங்கள் நாட்டுக்கு வருவது நடக்கும்.
3. இயேசுவே மேசியா என்பதை நம்பாதவர்களாய் யூதர்கள் திரும்ப வருவார்கள்.
4. பாலஸ்தீனத்தில் குடியேறுவதற்கு பிரிட்டன் காரணமாயிருக்கும்.

இஸ்ரேல்நாடு தோற்றுவிக்கப்படுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன் அக்கருத்துக்கள் எழுதப்பட்டன. அச்சமயத்தில் நாட்டில் 10,000 யூதர்கள் தான்

தங்கியிருந்தனர். ஏதோ அரசியல் நோக்கோடு டாக்டர் தாமஸ் இப்படி எழுதவில்லை. வலிமையான் சீயோன் வாதப் பிடிப்புகளினாலும் அவர் எழுதவில்லை. டாக்டர் தாமஸ் வேதாகமத்தை விசுவாசித்தார். 'தேவனுடைய விரல்' மீது நிச்சயமான நம்பிக்கையுடையவாயிருந்தார். அவரது இந்த குறிப்பிடத்தக்க முன்னறிவிப்புகள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் எழுத்துகள். இயேசுகிறிஸ்து எனும் நம் ஆண்டவரின் பிறப்பின்போது, அதாவது, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டவை ஆகியவற்றை ஆதாரமும் அடிப்படையுமாகக் கொண்டவை.

## இஸ்ரேலுக்கு தேவன் அளிக்கும் உறுதி

இஸ்ரேல் நாடு என்பது நவீன கால அற்புதம் ஆனால் அப்படி நடந்தது அற்புதம் என்பதைக் காட்டிலும் ஆண்டவர் அது நடக்கும் என்று கூறியது தான் விசேஷம். வெகு காலத்திற்கு முன்னே இது அறிவிக்கப்பட்டாயிற்று. *"ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்." (எரேமியா 31:10)*

## இஸ்ரேல் என்றொரு தேசத்தை தேவன் கொடுத்து விட்டார்.

இன்னொரு இடத்தில் தீர்க்கதரிசி இவ்விதம் கூறுகிறார்: *"ஆகையால் நான் அவர்களைத் தூரமாகப் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந்தாலும், நான் அவர்களை தேசங்களிலே சிதறடித்திருந்தாலும் நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்குப் பரிசுத்த ஸ்தலமாக இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்"* (எசேக்கியேல் 11:16).

இந்த மேற்கோளின் உண்மைத்தன்மையை வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது. யூதர்கள் எப்போதுமே அவர்களைக் கொடுமைப்படுத்தியவனின் அழிவைக் கண்டிருக்கிறார்கள். எஸ்தர் புத்தகத்தில், இக்கருத்தை ஒட்டிய ஒன்றை நாம் வாசிக்கிறோம். ஆமான் என்ற மனிதன் மொர்தேகாயையும், அவனோடு சேர்த்து பிற யூதர்களையும் ராஜ்யம் எங்கிலும் இராதபடி அழிக்கத் தீர்மானித்தான். தன் திட்டங்களை மனைவி மற்றும் நண்பர்களிடம் ஆமான் கூறிய பொழுது சக்திவாய்ந்த எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. *"மொர்தேகாய்க்கு முன் நீர் தாழ்ந்து போகத் தொடங்கினீர்; அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்து போவது நிச்சயம்." (எஸ்தர் 6:13)* இதற்குப் பின், வெகு சீக்கிரத்தில் ஆமான் மொர்தேகாய்க்கென ஆயத்தம் பண்ணியிருந்த தூக்குமரத்தில் தூக்கிலிடப் பட்டான்.



யூதர்கள் பலநூறு ஆண்டுகளாய் உபத்திரவங்களை அனுபவித்தாலும் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இது ஏன், எப்படி என்ற கேள்விக்கு அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் டி.சி.யிலுள்ள "யூதர்களின் பேரழிவு" பற்றிய அருங்காட்சியகத்தின் நுழைவாயிலில் அறியாமலேயே ஏசாயாவின் வாசகம் ஒன்றை எழுதி வைத்திருக்கிறார்கள். *"நீங்கள் எனக்குச் சாட்சிகள்"* (ஏசாயா 43:12) இஸ்ரேலின் வரலாறு இதற்கு சாட்சி பகர்வது மட்டுமல்லாமல், கீழ்க்கண்ட தேவனுடைய வார்த்தை உறுதிப்படுத்தவும் செய்கிறது.

*"உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நிர்மூலமாக்குவேன், உன்னையோ நான் நிர்மூலாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும் மட்டாய்த் தண்டிப்பேன்." (எரேமியா 30:11).*

மேலும் இஸ்ரேல் என்றொரு தேசம் இன்று இருப்பது தேவன் இருக்கிறார் என்றும் பூமியிலே அவரின் நோக்கம் செயல்படுகிறது என்றும் உறுதிப்படுத்துகிறது. *"நானே தேவன், வேறொருவரும் இல்லை...... அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற் கொண்டும் அறிவிக்கிறேன்" (ஏசாயா46:9,10).*

வேதாகமம் ஒரு விசேஷித்த புத்தகம் ஏனெனில் வரலாற்றை வரைபடம் போல் அதன் போக்கைக் காட்டுகிறது. 'தேவன் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறபடியால் விளைவைப் பற்றிய நிச்சயம் நமக்குக் கொடுக்கப்படுகிறது. உலகம் கனவுகளும் தரிசனங்களும் கொண்டுள்ள மக்களால் நிறைந்திருக்கிறது. அவர்களில் வெகு சிலருக்கே ஆற்றல் இருக்கிறது. தேவன் ஒருவரே தரிசனத்திற்கு வரைபடம் வரைகிறார், அதை எப்படி சாதிக்கலாம் என்பதற்கான விதிகளை அமைக்கிறார். அந்த தரிசனத்தை நிஜமாக்க, வரலாற்றின் போக்கை அவரே நிர்ணயிக்கிறார்.'

## இதைக் கவனியுங்கள்:

தேவனின் நோக்கம் விளக்குதல் - பூமியில் தேவனுக்கு ஒருநோக்கம் இருக்கிறது.

*"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (எண்ணாகமம் 14:21).*

*"சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்" (மத்தேயு 5:5).*

மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் (அப்போஸ்தலர் 17:31).

*“என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன். உம்முடைய நியாயத் தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்” (ஏசாயா 26:9)*

வரலாற்றின் போக்கை தேவனே நிர்ணயிக்கிறார். அவரின் நோக்கம் கலைந்து போகாதபடி (அழிந்து) தேவனே தேசங்களின் விதி (வருங்காலம்) யை நடத்துகிறார்.

*“உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பில் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது” (தானியேல் 4:17).*

விளைவைக் குறித்து தேவன் உறுதி கூறுகிறார் - மனிதரின் காரியங்களில் தேவனின் கரம் செயல்படுவது, கடைசியில் துன்பம் நிறைந்த உலகிற்கு சமாதானத்தைக் கொண்டு வருகிறது.

*“வனாந்திரத்திலே நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல் வெளியிலே நீதி தங்கித் தரிக்கும்.*

*“நீதியின் கிரியை சமாதானமமும் நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்” (ஏசாயா 32:16,17).*

*“கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ந்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும், அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை” (ஏசாயா 2:2-4)*

## இஸ்ரேலின் தனித்தன்மை

யூத மக்கள் இவ்வளவு தூரம் பிழைத்துவாழ்வதன் காரணம் அவர்கள் நினைப்பது போல் அசாத்திய ராணுவத்திறமையோ, கஷ்டங்களினூடும் பிழைத்தெழும்பி வாழும் திறமையோ அல்ல. தேவன் தீர்மானித்து அறிவித்ததால் மட்டுமே வாழ்கிறார்கள். தேவனுடைய நோக்கத்தில் இஸ்ரவேலுக்குப்






பிரத்தியேகமான தொரு *‘‘பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்’’ (ஆமோஸ் 3:2)* எனக் கூறினார். இன்னொரு சமயம், *“பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார்’’ (உபாகமம் 7:6)* என தேவன் அவர்களுக்கு நினைப்பூட்டினார். இருப்பினும், இந்த உறவு இஸ்ரேல் வெளிப்படுத்திய அவர்களின் விசேஷித்த குணங்களை ஆதாரமாகக் கொண்டதல்ல. அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு சிலாக்கியம். ஏனெனில் பூமியெங்கும் நீதியும் சமாதானமும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கம் அவர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இக்காரணத்திற்காக, தேவன் இஸ்ரேலிடம் “சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்......” (உபாகமம் 7:7,8) இங்கே ஆணை என்று குறிப்பிடுவது ஆதியாகமம் 22:18ல் ஆபிரகாமிடம் கூறியதாகும். *‘‘உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும்*

*ஆசீர்வதிக்கப்படும்''.* இங்ஙனம், இஸ்ரேல் தேவனின் நோக்கத்தின் மையத்திலிருக்கிறது. இதன் காரணமாகவே இயேசு ஒரு புறஜாதிப் பெண்ணிடம் "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது," என்றார் (யோவான் 4:22)

துரதிர்ஷ்டவசமாக யூதர்கள் தங்களின் விசேஷித்த அந்தஸ்தை ஒருபோதும் மதிக்கவில்லை. பூமியில் சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் கொண்டு வருவதில் அவர்களின் பங்கு என்ன என்பதை விளங்கிக் கொள்ள தவறியதால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய மேசியாவை ஒதுக்கித் தள்ளி தங்கள் மேல் தேவனின் கோபாக்கினையை வருவித்துக் கொண்டார்கள். உலக முழுவதிலும் சிதறிப் போனதற்கு, அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாததே நேரடிக்காரணம். அவர்களின் தலைவர்கள். *''அவன் இரத்தப்பழி எங்கள் பேரிலும் எங்கள் பிள்ளைகள் பேரிலும் இருப்பதாக"* என்றார்கள். இதன் காரணமாகவே இயேசு, *"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்,''* என்றார். மேலும் *''எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே. பட்டயக்கருக்கினாலே விழுவார்கள்; சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்"* (லூக்கா 21:22,24).

கடந்த 4000 ஆண்டுகளாக இஸ்ரேலின் வரலாறு வேதாகமத்தில் தேவனால் வரையப்பட்டுள்ளது. அவர்கள் எடுத்துவைத்த ஒவ்வொரு காலடியும், பயணம் செய்த ஒவ்வொரு பாதையும், தேவனின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, தேவனால் ஏற்பாடு செய்யப்பட்டதாக இருந்தது.

1. இஸ்ரவேல் எகிப்திலிருந்து விடுதலையாகப்போவதை, அது நடப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே தேவன் முன்னறிவித்தார். *(ஆதியாகமம் 15:13-16).*

2. இஸ்ரவேல் மக்களின் அனுபவங்களைப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே விவரமாக விரிவாகக் கூறினார். *(உபாகமம் 28:15-48).*

3. 1500 ஆண்டுகளுக்கு முன்னரே கி.பி.70ல் எருசலேமின் அழிவும், யூதர்கள் பலநாடுகளுக்கு சிதறுண்டு போதலும் விவரிக்கப்பட்டுள்ளது. *(உபாகமம் 28:49-65, லூக்கா 21:24).*

4. தன் பூர்வீக தாய்நாட்டிற்கு இஸ்ரேல் திரும்பிவருவது தேவனுடைய தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டது. *(ஏசாயா 11:12; ஏசாயா 27:13; எரேமியா 31:28; செப்பனியா 3:18,19).*

5. இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது அமைக்கப்படும் தேவனுடைய ராஜ்யத்திற்கு ஆரம்பமும், அடிப்படையுமாக இஸ்ரேல் இருக்கவேண்டுமென தேவனால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. *(ஏசாயா 2:2-4; ஏசாயா 61:4-6, எரேமியா*



*3:17,18, சகரியா 2:10,11).*



## இஸ்ரேலின் வருங்கால மீட்பு

பழங்கால இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய ராஜ்யம் எனப்பட்டனர். அவர்கள் *'ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியும்'* (யாத்திராகமம் 19:6) என வர்ணிக்கப்பட்டனர். அந்த சமயத்தில் தேவன் அவர்கள் ராஜாவாகியிருந்தார் (நியாயதிபதிகள் 8:23) அவர்களை ஆளுவதற்கு மனிதர் நியமிக்கப்பட்டாலும் ராஜா "கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறவர்" (1நாளாகமம் 28:5;29:23) எனப் பேசப்பட்டார். அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது; பாபிலோனியர்களின் ராஜ்யத்தைக் கவிழ்த்துப் போட்டார்கள்.



*"பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு, அது இனி முன்போலிராது, தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்"* (எசேக்கியேல் 21:26,27).

தேவனுடைய எல்லா நியாயத்தீர்ப்புகளிலும் போல, இங்கும் நம்பிக்கை அருளப்படுகிறது..... "உரிமைக்காரனானவர் வருமட்டும் சிங்காசனத்தில் அமர்ந்து, தேசத்தை நீதியோடு ஆட்சி செய்ய தேவன் ஒருவரை எழுப்பப்போகிறார்." (2சாமுவேல் 23:3).

அந்த ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. அவர் பிறப்பின்போது தேவதூதன் அவரின் தாயாகிய மரியாளிடம் (*''இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார் அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்;*

*அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது"* என்றான் (லூக்கா 1:31-33). இஸ்ரவேலின் மேல் ராஜாவாக இருக்க இயேசு பிறந்தார். அவர் சிலுவையில் அறையப்பட்ட பொழுது *"இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு,"* என அவருடைய சிலுவையின் மேல் எழுதப்பட்டது. இந்த வேலை இயேசுவால் செய்யப்படவில்லை.

அவரின் உயிர்த்தெழுதலுக்குப் பின், அவருடைய சீஷர்கள். *"ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?"* என்று கேட்டார்கள் (அப்போஸ்தலர் 1:6). துர்பேற்றின் பயனாக இந்த வேலை, இஸ்ரவேல் மக்கள் உலகமெங்கிலும் சிதறப்பட்டுக்கிடந்த 2000 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆனால் தேவனுடைய வார்த்தை நிச்சயமானது. தீர்க்கதரிசிகளும் கூறியிருக்கிறார்கள். ''*கர்த்தர் சீயோன் பர்வத்திலே இதுமுதல் என்றென்றைக்கும் ராஜாவாயிருப்பார்.... முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்; ராஜரீகம் எருசலேம் குமாரத்தியினிடத்தில் வரும்"* (மீகா 4:7,8). *"நான் உங்களை (இஸ்ரவேல்) ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வந்து.... அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்" (எரேமியா 3:14-17).* எசேக்கியேல் தீர்க்கதரிசியும் இவ்வாறு கூறுகிறார் : *"இதோ, நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, சுற்றிலுமிருந்து அவர்களைச் சேர்த்து, அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப்பண்ணி, அவர்களை இஸ்ரவேலரின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்" (எசேக்கியேல் 37:21,22).*

தேவனுடைய ராஜ்யம் அமைவதற்கு முந்திய நிகழ்ச்சியாக இஸ்ரேல் பழைய நிலைக்கு வருவதாகும்.

**இஸ்ரவேலுக்கு ஒரு புதிய இருதயம்**

இன்று இஸ்ரேல் தனது ஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. அவர்கள் அழிந்துபோகாமல் பிழைத்தெழும்பிய வரலாறு, மாபெரும் தடைகளின் மத்தியிலும் துணிச்சலையும், வீரத்தையும் காட்டிய வரலாறு. ஆனால் தேவனை சேர்த்துக் கொள்ளவில்லையே, அப்பகுதியில் ராணுவ வல்லமை பெறுவதற்காகப் பாதுக்காப்பான எல்லைகளை அமைக்க வேண்டுமென்ற இஸ்ரேலின் தற்போதைய கொள்கையில் பெரியதவறு இருக்கிறது. ஏனெனில் இஸ்ரேலின் அரசியல் தலைவர்கள் தங்கள் கணக்கில் தேவனுடைய விரலைச் சேர்த்துக் கொள்ளவில்லை. இஸ்ரேல் மக்கள் தங்கள் பிதாக்களின் தேவனை விட்டுவிட்டுத் தாங்களே சுயமாகத் தொடர்ந்து நடக்கும் வரை, இஸ்ரேலுக்கென தேவன் கொண்டிருக்கும் நோக்கம் நிறைவேறப்போவதில்லை. அவர்கள் மாம்ச புயத்தை நம்பி, மேட்டிமையாக சுயநம்பிக்கையையும் கர்வத்தையும் வெளிக்காட்டிக்



கொண்டிருக்கும் வரை மத்திய கிழக்கில் சமாதானம் வரவே வராது.

இதற்குப் பின்பு இஸ்ரவேலுக்கு என்ன நடக்கும் என்பதைத் தேவன் திரும்ப வெளிப்படுத்துகிறார். *"நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எரேமியா 31:33).* மாற்றங்கள் நிகழ ஆரம்பித்து விட்டதாக வேதாகமம் தெளிவுபட முன்னறிவிக்கிறது. இந்த இருதய மாற்றம் எப்பொழுது வருமென்றால் உலகின் நாடுகளெல்லாம் இஸ்ரேலை ஏளனமாகப் புறக்கணித்து, நவீன இஸ்ரேலை தற்காலிகமாக அழிவுக்குட்படுத்தும்போது, தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளை மறுபடியும் கேளுங்கள். *"இதோ கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும். எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தைவிட்டு அறுப்புண்டு போவதில்லை" (சகரியா 14:1,2).* யோவேல் தீர்க்கதரிசி இம் மாபெரும் சம்பவம் நடைபெறும் காலத்தைக் குறிப்பிடுகிறார். ''*இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும், அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி'' (யோவேல் 3:1,2).* வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் இஸ்ரவேல் தன் நாட்டிற்குத் திரும்ப வந்துசேரும்.

இந்த மாற்றத்தைக் கொண்டு வரும் சம்பவங்கள் தேவனின் கரங்களில் இருக்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இஸ்ரேலுக்கு வரப்போகிற அவமானமும் சிறுமையும் அவர்களை இயேசு கிறிஸ்துவிடம் திரும்பச்செய்யும். இயேசுவை மேசியா என இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளும் காலத்தைக் குறித்து தீர்க்கதரிசிகள் எழுதுகிறார்கள். *"தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புவான்" (சகரியா 12:10).* அது இஸ்ரேலுக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்குமே கஷ்டமான காலமாயிருக்கும். ஏனெனில் இஸ்ரேல் இறுதியாக மீண்டு வருவது தேவனால் தீர்மானிக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கண்காணிக்கப்படும் ஒரு புதிய உலக ஒழுங்கைக் கொண்டுவரும். இஸ்ரேலைப் பற்றி வேதாகமம் சொன்ன ஒவ்வொன்றும் இந்த நேரம் வரை நிறைவேறியிருப்பது, இன்னும் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள் மேல் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. *"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2பேதுரு 1:19).*

**- ரான்கிட்**

# தானியேல் - தேவனுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தல்

## ஒரு தானியேலாயிருக்கத் துணிவுக்கொள்

தீர்க்கதரிசியாகிய தானியேலின் பெயரில் உள்ள திருமறை நூலில் தீர்க்கதரிசனங்களை புரிந்துகொள்ள நாம் காட்டும் உற்சாகத்தில் தானியேலின் நேர்மையைச் சில சமயங்களில் காணத் தவறிவிடுகிறோம்.



தானியேல் 2ம் அதிகாரம் நேபுகாத்நேச்சாரின் பிரமாண்டமான சிலையைப் பற்றிய வியத்தகு. அர்த்தப்படுத்தலை வெளிப்படுத்துகிறது. தானியேல் 7ம் அதிகாரத்தில் சரிசமமான ஆவலைத் தூண்டுகின்ற, நான்கு மிருகங்கள், ஒருசிறிய கொம்பு, பரிசுத்தவான்கள் மற்றும் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய தரிசனமும் அதன் விளக்கமும் அடங்கியுள்ளது. 8ம் அதிகாரத்தில் ஒரு ஆட்டுக்கடா, ஒரு வெள்ளாட்டுக்கடா, அவைகளின் கொம்புகள் மற்றும் பரிசுத்தவான்களின் கூட்டம் ஆகியவற்றினிடையேயான ஒரு இணையான ஆவலை அளிக்கிறது. தானியேலின் முனைப்பான ஜெபத்திற்கு மாறுத்தரமா, பலகூருடைய தொலை நோக்கான *"எழுபது வார தீர்ச்சதரிசனத்தோடு"* 9ம் அதிகாரம் முடிகிறது. *எஞ்சிய அதிகாரங்கள், "கடைசி நாட்களில் (தானியேலாகிய) உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப்பண்ணும் படிக்கு வந்தேன்; இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும்"* என்பதை ஒரு தேவதூதன் கூறிய சம்பவங்களை வெளிப்படுத்துகின்றன. *(தானியேல் 10:14).*

ஆயினும் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட அனைத்தையும் தானியேலால் கூடப் புரிந்து கொள்ள இயலவில்லை. (தானி 12:8). ஆனால் தனது தேவனை அவர் நம்பினார்! எனவே, தானியேலின் உத்தமத்திற்கான இறுதியான வெகுமதி என்னும் இப்புத்தகத்தின் முக்கியமான செய்தியோடு சரியான விதத்தில், இந்நூல் நிறைவு பெறுகிறது: "நீ உன் வழியில் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப் பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்துக்கு எழுந்திருப்பாய்" (தானியேல் 12:13).



தனது வாழ்நாளில் தேவனுக்கான தனது நிலைப்பாட்டை அவர் தொடர்ச்சியாக காத்து வந்ததால் (இயேசுகிறிஸ்து மனிதர்களை நியாயந்தீர்க்கும்) கடைசிக் காலத்தில் தானியேல் எழுந்திருப்பார்.

தானியேல் முதல் முறையாக தேவனுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தது ஞாபகத்திலிருச்கிறதல்லவா ? பாபிலோனிய சிறையிருப்பில் அவர் ஒரு யூதவாலிபர். கல்தேயரின் வாடிக்கைமுறை மற்றும் கலாச்சாரத்தோடு மூளைச்சலவை செய்யப்படும் திட்டமான நோக்கத்திற்கான ராஜரீகமான உயர்ந்த யூத வாழ்விலிருந்து கொண்டுசெல்லப்பட்ட அவர், புறஜாதி தேவர்களுக்கு அது படைக்கப்பட்டிருக்கலாம் அல்லது மோசேயினால் அது 'தீட்டானதென' தீர்க்க பட்டிருக்கலாம் என்பதற்காக தனக்களிக்கப்பட்ட போஜனத்தைப் புசிக்க அவர் மறுத்துவிட்டார். *''தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்திலே தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி, பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.''* (தானியேல் 1:8).

தனிப்பட்ட உத்தமம் மற்றும் தேவனைக் கனப்படுத்தும் குணாதிசயத்திற்கான அவனது தீர்மானத்திற்கு பலன் கிட்டியது. ''தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடதில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்'' (தானியேல் 1:9). பாபிலோனிலிருந்து யாரைக் காட்டிலும் பத்து மடங்கு ஞானத்தாலும் அறிவினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த தானியேல் திடீரென நேபுகாத்நேச்சாரின் மறைபொருளான சொப்பனத்தை விளக்கிக்கூற வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார் - இல்லையெனில் மற்ற ஞானிகளோடு இவரும் கொல்லப்படுவார். இந்தச் சவாலளிக்க தனது புத்தி மற்றும் யோசனையோடுகூட (தானியேல் 2:14), தனது கடவுள் பயமிக்க தோழர்களிடம் சென்று, "இந்த மறைபொருளைக் குறித்து பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கும்படி" (தானியேல் 2:18) அவர்களை வேண்டிக் கொண்டான். ஏனெனில் ராஜாவின் சொப்பனத்திற்குரிய சரியான அர்த்தத்தை அளிக்க பரலோக தேவன் ஒருவரால் மட்டுமே கூடும் என்பதைத் தானியேல் தெளிவாகக் கூறிவிட்ட (தானியேல் 2:27-30,45) படியால் நேபுகாத்நேச்சார் வாயிலாகத் தேவன் மறுபடியும் அவருக்கு வெகு மதியளித்தார்.

*"பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகு மதிகளைக் கொடுத்து, அவனைப் பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும் பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான் (தானியேல் 2:48)."*

இன்னொரு சொப்பனத்தைக் குறித்து நேபுகாத்நேச்சார் தானியேலைக் கேட்டபோது, உத்தமமான இவர் நேரடியாக ராஜாவிடம் பேசினார். ''ஆகையால்

*ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக் கொண்டு நீதியைச் செய்து சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம்." (தானியேல் 4:27).* இந்த எச்சரிப்பின் விளைவாக குறிப்பிடத்தக்க மனம் மாறுதலை நேபுகாத்நேச்சார் பெற்றதோடு, உன்னதமான தேவனை உயர்த்தி புகழ்ந்தும் ஒரு முக்கியமான அறிக்கையை வெளியிட்டார். (தானியேல் 4:1-3, 34-37).

இவ்வறிக்கைகள் இரு விதங்களில் முக்கியமானவை. எவ்விதக் கிரயம் செலுத்தியும் தேவனை கனப்படுத்த தீர்மானித்திருந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் தானியேலின் மூன்று தோழர்களின் நிலைப்பாட்டினால் நேபுகாத்நேச்சாரின் உள்ளம் ஏற்கெனவே வல்மையாகத் தொடப்பட்டிருந்தது. (தானியேல் 3:16-18). அதன் விளைவாக, இஸ்ரவேலின் தேவனை, உயர்த்தி ஒரு ஆணையைப் பிறப்பித்த நேபுகாத்நேச்சார் அம்மூன்று மனிதரையும் ஏற்ற விதமாக உயர்த்தினார் (தானியேல் 3:28-30). எனவே, இஸ்ரவேலின் அற்புதமான தேவனைப் பற்றி மக்களுக்குச் சொல்லும் சாம்ராஜ்யம் தழுவிய இரண்டாவது முறையான ஆணையாகும் இது!

துரதிஷ்டவசமாக, நேபுகாத்நேச்சாரின் பேரனாகிய ராஜாவாகிய பெல்ஷாத்சார் தனது தாத்தாவின் உதாரணத்திலிருந்து கற்றுக் கொள்ளவில்லை. சுவரில் எழுதிய தேவ எழுத்தினால் கலங்கிப் போன அவன் அவ்வார்த்தைகளை விளக்குமாறு தானியேலை இரந்து மன்றாடினான். (தானியேலின் தொடர்ச்சியான உத்தமத்தைக் குறித்த விறுவிறுப்பான இக்கதையை தானியேல் 5ம் அதிகாரம் நமக்குக் கூறுகிறது). இஸ்ரவேலின் தேவனைக் குறிப்பாகப் பரிகரிக்கின்ற ராஜாவின் களியாட்டம் மற்றும் மதுபான மயக்கத்தில் பங்குபெற தானியேல் மறுத்துவிட்டார். வீணான, மனமாற்றமடையாத இந்த ராஜாவிடமிருந்து எந்த வெகுமதியையும் பெறவும் அவர் மறுத்துவிட்டான். கல், மரம், இரும்பு, வெண்கலம், வெள்ளி மற்றும் பொன்னினால் தேவர்களைப் புகழுவதற்காய் அர்ப்பணிக்கப்பட்ட விருந்தினர் கூட்டத்தின் நடுவில் ஜீவனுள்ள தேவனுக்காய் ஒரு நிலைப்பாட்டை எடுத்த தானியேல், பாபிலோன் சாம்ராஜ்யத்தின் முடிவை கலங்கிப்போன அதின் அதிபதிக்கு அறிவித்தான். எனவே, அந்த ராத்திரியில்தானே பாபிலோன் பெர்சிய இராணுவத்திடம் வீழ்ந்தது. அதிர்ஷ்டவசமாக, அடுத்த ராஜாவாகிய (பெர்சிய இராணுவத்தைத் தலைமையேற்று நடத்திய) மேதியனாகிய தரியு தானியேல் போன்ற ஒரு மனிதரின் மதிப்பை அறிந்திருந்தான். தானியேலை முந்தைய அரசு பதவியிலேயே தொடர வைத்தான். வயதாகிவிட்ட தானியேல் தனது தேவனுக்கு முன்பாக தினமும் மூன்று வேளை ஜெபிக்கத் தவறவில்லை இந்த அர்ப்பணிப்பானது ராஜாவுக்கான அவரது சேவையில் பிரதிபலித்தது; தனக்கு முன் இருந்த அதிபதிகளைப் போலவே இந்த ராஜாவும் மேலான நடத்தையை வெகுமதியளித்துக் கனபடுத்தினார். *''தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான்; தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்" (தானியேல் 6:3).*



தனது தலைமை நிர்வாகி தந்திரமாக சிங்கங்களின் கெபியினுள் போடப்பட்டபோது, தரியு, 'தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதை வைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்குமட்டும் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தான்' (தானியேல் 6:14). மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற பிரமாணத்தை மாற்ற முடியாத தரியு தனது ஆளுடன் சிங்கங்களின் கெபிக்குச் சென்று தானியேலை நோக்கி, *"நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்" (தானியேல் 6:16).* ஜெயமாக, தேவன் தப்புவித்தார்! மிகவும் குதூகலமடைந்த தரியு தானியேலின் தேவனைத் துதித்து உயர்த்தும், நேபுகாத்நேச்சாருக்கும் மிஞ்சிய சாம்ராஜ்ய அளவிலான ஒரு ஆணையை வெளியிட்டான். ஒரு மனிதன் தேவனுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தபடியால், முடிவுபரியந்தம் நிற்கும் கர்த்தத்துவமுடைய அழிவில்லாத ராஜ்யத்தையுடைய, என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற ஜீவனுள்ள தேவனைப் பற்றி எல்லா ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் கேட்க முடிந்தது.



தானியேலின் தீர்க்கதரிசனங்கள் மற்றும் அவரது அர்த்தத்தை வெளிப்படுத்தும் திறமைகளைப் போலவே அவரது வாழ்வுமுறையும் முக்கிய மானதாயிருந்ததென்பதைக் கவனிக்கவும், இரு ராஜாக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, தேவனை உண்மையாக அறிந்து சேவியுங்கள் என்ற மிகவும் அடிப்படையான ஒரு தீர்க்கதரிசன செய்தியானது அவர்கள் மூலமாக இரு சாம்ராஜ்யங்களுக்கு கொடுக்கப்பட்டது. (எபிரெயர் 11:6 உடன் ஒப்பிடவும்). வழிதவறிச் செல்வோரை எச்சரிப்பதும், நீதிமான்களை உற்சாகப் படுத்துவதும் கடவுளை மெய்ப்பித்துக் காட்டுவதுமே வேதாகமத தீர்க்கதரிச்னத்தின் மூன்று முக்கியமான நோக்கங்களாகும்.

புதிய ஏற்பாட்டு உபதேசமும் இதுதான். கிறிஸ்துவின் சீஷர்கள் தீங்கு நாட்களைச் சகித்து, கிறிஸ்து திரும்ப வரும்போது அவருக்காக இன்னும் நிற்கிறவர்களாயும் இருப்பதற்கு தேவனிடமிருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை இரு வேதாகமம் பகுதிகள் விளக்குகின்றன.

*"கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்... ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" (எபேசியர் **6:10-13**).*

*"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலை களினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா **21:34-36**).*